இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
இடைநிலை, மூன்றாம்நிலை கல்வித் துறை
கல்விப்பீடம்
முதுகல்விமாணி நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப்பரீட்சை - **2018/2019**
**ESP2317/ STP9617 –** ஆசிரியர் கல்வி
காலம்: 03 மணித்தியாலங்கள்

---

நேரம் : மு.ப 09.30 – நண்பகல் 12.30 திகதி : 24.03.2019

---

எவையேனும் நான்கு(04) வினாக்களுக்கு விடையளிக்குக

01. (i) 'ஆசிரியர் கல்வி' மற்றும் 'ஆசிரியர் பயிற்சி' என்பவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை விளக்குக? (05 புள்ளிகள்)

(ii) ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் பிரதான நோக்கங்கள் நான்கினை (04) விளக்குக? (10 புள்ளிகள்)

(iii) இலங்கையின் ஆசிரியர் கல்வி நிலையங்களினால் வழங்கப்படும் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் மேலே குறிக்கப்பட்ட நோக்கங்கள் பிரதிபலிக்கின்றதா என்பதைப் பரிசீலிக்குக? (10 புள்ளிகள்)

02. (i) 'வாண்மைத்துவம்' என்பதனால் கருதப்படுவது யாது? (05 புள்ளிகள்)

(ii) தகவல் தொழில்நுட்பத்தின் மாறிவரும் நிலைமைகளை இணைத்துக் கொள்வதற்காக ஆசிரியர்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டிய நான்கு (04) வாண்மைசார் தேர்ச்சிகளை விளக்குக? (10 புள்ளிகள்)

(iii) தகவல் தொழில்நுட்பத்தினது பின்னணியில் ஆசிரியர் கல்வியில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் இலங்கையின் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் இவற்றினது தாக்கங்களையும் பரிசீலிக்குக? (10 புள்ளிகள்)

**03.** (i) "ஆசிரியர்களின் வாண்மைசார் நடத்தைகளை சீராக்குவதற்கு 'வாண்மைசார் ஒழுக்கக்கோவை' மிகவும் அவசியம்" இரண்டு (02) காரணங்கள் தருக? (05 புள்ளிகள்)

(ii) "இலங்கையின் நிலைமையில் வாண்மைசார் ஒழுக்கக்கோவையினை நடைமுறைப்படுத்துவது என்பது ஒரு சவால் மிக்க விடயமாகும்." வாண்மைசார் ஒழுக்கக் கோவையினை நடைமுறைப்படுத்துவதில் கொள்கையாளர்கள் எதிர்நோக்கும் நான்கு (04) சவால்களை உதாரணங்களுடன் விளக்குக? (10 புள்ளிகள்)

(iii) இலங்கைப் பாடசாலைகளில் வினைத்திறன்மிக்க முறையில் ஒழுக்கக் கோவையின் நடைமுறைப்படுத்தலை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் நான்கு(04) தருக? (10 புள்ளிகள்)

04. (i) ‘சூழ்தள வாண்மை விருத்தி’ என்பதால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

(ii) பாடசாலைமட்ட வாண்மை விருத்திச் செயற்பாட்டின் கீழ் ஆசிரியரது வாண்மை விருத்தியினை மேம்படுத்தவதற்காக கொள்கை வகுப்பாளர்களால் எடுக்கப்பட்ட நான்கு (04) நடவடிக்கைகளை விளக்குக?

(10 புள்ளிகள்)

(iii) இலங்கைப் பாடசாலைகளில் பாடசாலைமட்ட வாண்மை விருத்தி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள நான்கு (04) சவால்களை ஆராய்க?

(10 புள்ளிகள்)

05. பின்வருனவற்றில் எவையேனும் மூன்றிற்கு (03) சிறுகுறிப்பு எழுதுக?

(i) யுனெஸ்கோவினால் அறிமுகப்படுத்தப்பட்ட ‘ஆசிரியர் தரநிர்ணயங்கள்’

(ii) இலங்கைச் சூழலமைவில் ஆசிரியர்களை வலுவூட்டுதவற்கான சிறந்த செயன்முறைகள்

(iii) 21 ஆம் நூற்றாண்டில் ஆசிரியர் ஆளுமை

(iv) இலங்கையில் ஆசிரியர் கல்வியின் கட்டமைப்பு

**(3x8=24+1=25** புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*